விலை ரூ. 10/=

# ஈழநாடு

வடக்கின் முதலாவது நாளிதழ்

Eelanadu

28.07.2020 செவ்வாய்க்கிழமை

## ஜனநாயக போர்வையில் பிரபாவின் கோரிக்கைகளை அடைய முயற்சி



குருநாகல், ஜூலை 28

போரின் மூலம் வெற்றி கொள்ள எண்ணிய கோரிக்கைகளை தற்போது ஜனநாயக போர்வையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடைய முயற்சிக்கின்றது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விமர்சித்துள்ளார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிரபாகரனின் கோரிக்கை

02




கனடா, அமெரிக்கா முன்னெடுத்த

# 2009 பேரழிவை தடுத்து நிறுத்தும் முயற்சியை சம்பந்தனே மறுத்தார்

### சாட்சிகளுடன் அம்பலப்படுத்துகிறார் சிவாஜிலிங்கம்

யாழ்ப்பாணம்,ஜூலை28

2009 போர் உச்சம் பெற்றிருந்தபோது, புலிகளின் சம்மதத்துடன் கனடாவும், அமெரிக்காவும் இணைந்து போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்த முனைந்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாகவே இந்த விடயம் முன்னகர்த்தப்பட வேண்டும் என்று என்னூடாக புலிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டது.

ஆனால், இதற்கு புலிகளும் சம்மதித்தனர். அதைச் செய்ய சம்பந்தன் மறுத்துவிட்டார். இதன் விளைவுதான் பல்லாயிரக்கணக்கான எமது மக்களின் அழிவுக்கும் - ஆயிரக்கணக்கான போராளிகள், தளபதிகள் நமது போராட்டத் தலைவர்களின் அழிவுக்கு காரணம் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் எம். கே.சிவாஜிலிங்கம்.

02





## தேர்தல் பரபரப்புக்குள் யாழ்.வந்தார் சுவிஸ் தூதர்

### அரசியல்வாதிகளுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை28

பாராளுமன்ற தேர்தல் நாள் நெருங்கி வரும் நிலையில், சுவிஸ் தூதுவர் கன்ஸ்பீற்றர் மொக், அரசியல் விவாகரத்துக்கு பொறுப்பான அதிகாரி சிடோர்னியா கப்பிறியல் ஆகியோர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இவர்கள் நேற்றைய தினம், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ். தேர்தல் மாவட்ட

02

## இராணுவ பாதுகாப்பின் கீழ் வாக்கு எண்ணும் நிலையங்கள்

கொழும்பு, ஜூலை 28

ஒகஸ்ட் 5 ஆம் திகதி வாக்களிப்பு நிறைவுற்றதும் வாக்கு எண்ணும் நிலையங்களை சுற்றி ஒரு கிலோமீற்றர் சுற்றுவட்டாரம் வரை இராணுவப் பாதுகாப்புக்குள் கொண்டுவரப்படும் என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வாக்குப் பதிவு முடிந்ததும் அதே இரவிலேயே வாக்கு எண்ணும் பணிகள் ஆரம்பிப்பது

02



## நேற்று மாத்திரம் 22 பேருக்கு தொற்று

கொழும்பு, ஜூலை 28

நாட்டில் மேலும் 22 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று கண்டறியப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

கண்டறியப்பட்ட 22 பேரில் 17 பேர் சேனாபுர புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளாவர்.

மேலும், 5 பேர் கட்டாரிலிருந்து நாடு திரும்பிய நிலையில் தனிமைப்படுத்தல் நிலையங்களில்

02

## தமிழ் மக்களுக்கு சுயாட்சி அதிகாரம் வழங்க வேண்டும்

### ஜே.வி.பி. திடீர் கரிசனை




கொழும்பு, ஜூலை 28

“தமிழர்களுக்கான அரசியல் தீர்வு கிடைக்கும் - அரசமைப்பு மூலம் நிரந்தர தீர்வு வழங்கப்படும் என்ற கதைகளை கூறிக்கூறி தமிழர்களை 70 ஆண்டுகளாக ஏமாற்றிவிட்டனர். தமிழர்கள் தமது அரசியல் அபிலாஷைகளுடன் சுயமாக தீர்மானம் எடுக்கும்

02

## த. தே. கூட்டமைப்பின் துணையுடன் கிழக்கு ஆட்சியை கைப்பற்றுவோம்

### ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சூளுரை



கொழும்பு, ஜூலை 28

பாராளுமன்றத் தேர்தலில் ஆதிக்கத்தை பலப்படுத்துவது மட்டுமல்ல, அடுத்து நடக்கும் மாகாண சபை தேர்தலில் கிழக்கின் ஆட்சியை கைப்பற்ற வியூகம் அமைத்துள்ளோம். இம்முறையும் கிழக்கின் ஆட்சியை கைப்பற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவோம் - என்று கூறியுள்ளார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிஸ் தலைவரும் ஐக்கிய மக்கள்

02






# 2009 பேரழிவை....

இந்த விடயத்தை 'நிமிர்வு' அரசியல் மாத இதழின் யூ - ரியூப் சனலுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் குறிப்பிட்டார். தவிர, பிரசார மேடைகளிலும் இந்த விடயத்தை அவர் குறிப்பிட்டு வருகிறார்.

அவரின் இந்த நேர்காணலில் மேலும் தெரிவித்தவை வருமாறு: -

போராட்ட காலத்தில் நானும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தியாவில் தங்கியிருந்தோம். போரை நிறுத்த வலியுறுத்தி கவனயீர்ப்பு போராட்டங்களில் பங்கேற்று வந்த எனக்கு அங்கு, தொடர்ந்தும் தங்கியிருக்க முடியாத அளவுக்கு நெருக்குதல்கள் வந்தன. நான் உடனடியாக நாடு திரும்ப முடியாத நிலை. இதனால், லண்டன் சென்று அங்கு கவனயீர்ப்பு போராட்டங்களை நடத்த முயன்றேன்.

லண்டனில் நான் தங்கியிருந்தபோது, கனடாவின் சட்டத்தரணி கரிகாலன் அதிகாலை 2 மணியளவில் எனக்கு தொலைபேசி அழைப்பு எடுத்தார்.

புலிகள் சொல்ல வேண்டும் தாங்கள் போர் நிறுத்தத்துக்கு தயார் என்று. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேரடியாக சொன்னால் - சொன்ன 72 மணி நேரத்தில் அமெரிக்காவும் கனடாவும் இணைந்து உடனடியாக போர் நிறுத்தத்தை அமுல்படுத்தும்.

விடுதலைப் போராட்டத்தின் தலைவர்கள், போராளிகள், பொதுமக்கள் அத்தனை பேரின் பாதுகாப்பும் இந்த நாடுகள் பொறுப்பேற்கும். ஆயுதங்கள் அனைத்தும் கையேற்று இலங்கை இராணுவத்திடம் கையளிக்கப்படாது. இந்த நாடுகளின் பாதுகாப்பிலேயே வைக்கப்படும் அதன் பின்னர் ஓர் அரசியல் தீர்வு வழங்கப்படும் என்ற வாக்குறுதி வழங்கப்பட்டது.

இதை புலிகளிடம் கேட்டுச் சொல்லுமாறு என்னிடம் கேட்கப்பட்டது. திலீபன் ஊடாக அரசியல்துறை பொறுப்பாளர் நடேசனுடன் தொடர்பு கொண்டேன். நான் அவருக்கு விடயத்தை சொன்னேன்.

அவர் தலைவர் பிரபாகரனுடன் நேரில் கதைத்து விட்டு சொல்வதாக சொன்னார். ஒரு நாளுக்குள் அவர் மீண்டும் என்னைத் தொடர்பு கொண்டு "சிவாஜி நாங்கள் பேசி விட்டோம். தலைவர் அதற்கு சம்மதித்து விட்டார் - நாங்கள் சம்மதிக்கிறோம். நீங்கள் தயவு செய்து சம்பந்தன் ஐயாவிடம் கூறுங்கள் விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்துக்கு தயார் என்று..." அத்துடன் இந்த விடயத்தை சம்பந்தனுடன் பேசி தொடர்ந்து முன்னெடுக்குமாறும் கேட்டார்.

நான் சொன்னேன் "நான் சொன்னால் சம்பந்தன் ஐயா அதை எவ்வாறு எடுப்பார் என்று தெரியாது. நீங்கள் அவரிடம் முதலில் கூறுங்கள். அதன் பின்னர் தொடர் நடவடிக்கையை நான் முன்னெடுக்கிறேன் என்று. அவர் சம்மதித்தார்.

இந்தியாவில் இருந்த சம்பந்தன் ஐயாவின் வீட்டு தொலைபேசி இலக்கங்களை அவரிடம் கொடுத்தேன். அவர் சம்பந்தன் ஐயாவுடன் தொடர்பு கொண்டு பேசி விட்டு என்னிடம் அந்தத் தகவலை என்னிடமும் தெரிவித்தார்.

நான் கரிகாலனிடம் தகவலை தெரிவித்தேன். இந்தத் தகவல் பொப்ரேக்கும் தெரியப்படுத்தப்பட்டது.

அப்போது சம்பந்தன் ஐயா, சொன்ன பதில் பொப்ரேயை இலங்கைக்கு வருமாறு சொன்னார். அப்போது பொப்ரே சொன்னார், கனடாவின் முக்கியமான - ஒன்ராறியோ மாநில முன்னாள் முதலமைச்சரான என்னை இலங்கை அரசாங்கம் அடையாளம் காண்பது இலகுவானது. என்னை அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள் - இந்தியாவும் என்னை அனுமதிக்காது திருப்பி அனுப்பி விடும் என்று அவர் கூறினார்.

அதன்பின், சம்பந்தன் மௌனம் காத்தார். அப்போது அவருக்கு ஒரு பதில் அனுப்பப்பட்டது. சம்பந்தனுக்கு 5 ஆண்டுகளுக்கு பல தடவைகள் நுழைவதற்கான விஸா இருக்கிறது. அங்கு வரச் சொல்லுங்கள். அங்குள்ள கனடா தூதரகத்தால் அவருக்கு 'மினிஸ்ரர்ஸ் பெர்மிற்' வழங்குகிறோம். அவரை யாராலும் திருப்பி அனுப்ப முடியாது. அவர் அங்கு வந்து உடனடியாக சொன்னவுடன் 72 மணி நேரத்தில் போர் நிறுத்தத்தை அமுல் படுத்துகிறோம்.

இன்னொரு விடயம் சம்பந்தன் அங்கு எவ்வளவு காலம் தங்க விரும்புகிறாரோ, அவ்வளவு காலமும் தங்குவதற்கு தேவையான வசதிகளை கனடா அரசாங்கம் செய்யத் தயாராக இருக்கிறது - என்ற செய்தியும் சொல்லப்பட்டது. அவருக்கும் - அவரின் குடும்பத்துக்கும் கொடுக்கப்பட்ட விசேட அனுமதியையும் பாதுகாப்பையும் அவர் மறுத்துவிட்டதன் விளைவே இந்தப் பேரழிவு. அவர் அன்று சென்றிருந்தால், போராட்டத் தலைவர்கள், ஆயிரக்கணக்கான பொது மக்கள், போராளிகள், தளபதிகளின் உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கும். இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புமே காரணம்.

2010 இலிருந்து இந்த விடயங்களை கூறி வருகிறேன். இதை சம்பந்தனோ, பேச்சாளர் சுமந்திரனோ மறுக்கவில்லை. சிவாஜிலிங்கம் பொய் சொல்கிறார் என்றால், முன்னாள் முதலமைச்சர் பொப்ரே வாய் திறந்தால் உங்கள் நிலைமை என்ன என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

## ஜனநாயக...

களை அனுமதிக்கவோ - அவற்றைப் பெற்றுக் கொடுக்கவோ இடமளிக்க போவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

குருநாகல், தம்பதெனியவில் நேற்று இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், போர்காலம் போன்று பேரழிவு சூழல் மீண்டும் ஏற்பட வாய்ப்பு அளிக்கப்படாது. எனவே, மக்கள் இம்முறை பொதுத் தேர்தலில் தெளிவான முடிவை எடுக்க வேண்டும்.

போரால் 60 ஆயிரம் கல்வி ஆற்றலுடைய இளைஞர்களை நாடு இழந்தது. விடுதலைப் புலிகள் அமைப்பு வடக்கு, கிழக்கை வேறுபடுத்தி தனி இராச்சியத்தை கட்டியெழுப்ப முயற்சித்தது. எம்மால் புலிகளின் அந்த முயற்சி முறியடிக்கப்பட்டது - என்றும் சொன்னார்.

## இராணுவ...

வழமை. ஆனால், இம் முறை ஒகஸ்ட் 6 ஆம் திகதி காலையே வாக்கு எண்ணும் பணி ஆரம்பமாகும்.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

வாக்குப் பதிவு நிறைவடைந்ததும் வாக்குப் பெட்டிகள் அதிகாரிகளால் சான்றளிக்கப்பட்ட ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டு சீல் வைக்கப்படும். இரவுக்குள் வாக்கு எண்ணும் நிலையங்களுக்கு அவை அனுப்பப்படும்.

மறுநாள் வாக்கு எண்ணும் பணிகள் தொடங்கும். ஒவ்வொரு கட்சியில் இருந்தும் இரண்டு முகவர்கள் தேர்தல் கண்காணிப்பு சுயாதீன குழுவினர் என்போர் வாக்கு எண்ணும் நிலையங்களில் தங்க அனுமதிக்கப்படுவர் என்றும் அவர் கூறியிருந்தார்.

## தமிழ்....

அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்"

- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தலைவர் அனுரகுமார திசாநாயக கூறியுள்ளார்.

இதேவேளை, நாட்டில் நிகழ்ந்த இனக்கலவரங்கள் அனைத்தின் பின்னணியிலும் ஆட்சியாளர்களின் பங்களிப்பே இருந்தது என்றும் அவர் சாடியுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் சம்பந்தமான விடயங்கள் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த நாட்டில் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என அனைவரும் அளவுக்கு அதிகமாக நிம்மதியை, உடைமைகளை, உயிர்களை இழந்துவிட்டனர். 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு வரும் வரையில் இந்த நாட்டில் அனைத்து மக்களும் இழந்தவையே அதிகமாகும். அவ்வாறு இருந்தும் யுத்தம் முடிவுக்கு வந்து குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளாவது இந்த நாடு அமைதியாக சென்றுள்ளதா, ஆட்சியாளர்கள் அமைதியாக இந்த நாட்டைக் கொண்டு சென்றார்களா?

யுத்தத்தின் பின்னர் 2013, 2014 ஆம் ஆண்டு காலத்தில் இந்த நாட்டில் மீண்டும் சிறுபான்மை மக்களுக்கு எதிரான இனக்கலவரம் உருவாக்கப்பட்டது. பின்னர் கருக்கலைப்பு முயற்சிகள் என கூறிக்கொண்டு மீண்டும் இனக்கலவரம் உருவாக்கப்பட்டது. அண்மையில் குண்டுத்தாக்குதல் இடம்பெற்றது. இந்த குழப்பங்கள் அனைத்தின் பின்னணியிலும் ஆட்சியாளர்களே உள்ளனர் என்பதை பொறுப்புடன் நாம் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

வேறு எவரும் இதில் பொறுப்புக்கூற முடியாது. இந்த நாட்டில் இனவாதம், மதவாதம் இல்லாத அரசியலை ஆட்சியாளர்களால் முன்னெடுக்க முடியாதுள்ளது. இந்த நாட்டில் அரசியல் தீர்வு கிடைக்கும், அரசியல் தீர்வு வழங்கப்படும், அரசமைப்பின் மூலமாக தீர்வுகள் சாத்தியம் என மிக நீண்ட காலமாக கதைகளைக் கூறிக்கூறியே தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டனர். இனியும் அதே ஏமாற்றுக் கதையை எத்தனை ஆண்டுகளுக்கு தமிழர்கள் நம்பத் தயாராக உள்ளனர்.

இந்த நாட்டில் பிளவுக்கோ, பிரிவினைக்கோ இடமில்லை என்பதை சகல மக்களும் ஏற்றுக்கொண்டு விட்டனர். ஆனால், ஆட்சியாளர்கள்தான் இன்னமும் அதனை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார். இதுவே அனைத்து சிக்கல்களுக்கும் காரணம். தமிழர்கள் தங்களின் கலாசார, சமய, மத, நம்பிக்கைகளுக்கு அமையவும், அரசியல் அபிலாஷைகளுக்கு அமையவும் சுயமாக தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை வழங்க வேண்டும். அது வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் தேசிய கொள்கைக்குள் அவர்கள் ஒன்றிணைந்து வாழக்கூடிய சூழலை அவர்களே ஏற்படுத்திக்கொள்வார்கள் - என்றார்.

## தேர்தல்...

வேட்பாளருமான க.வி. விக்னேஸ்வரனையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் த.சித்தார்த்தன், எம். ஏ. சுமந்திரன், ஈ. சரவணபவன், பா.கஜதீபன் ஆகியோரையும் சந்தித்துப் பேசினர்.

இதன்போது, அரசியல் களநிலவரம் குறித்து விரிவாக விசாரித்து அறிந்து கொண்டனர்.

தேர்தல் நாளுக்கும் வாக்கு எண்ணும் நாளுக்கும் இடையிலான இடைவெளி பலத்த சந்தேகத்தை எழுப்புகிறது என்றும், வடக்கில் அதிகரித்துள்ள இராணுவப் பிரசன்னம் குறித்தும் தான் பிரஸ்தாபித்தார் என க.வி. விக்னேஸ்வரன் குறிப்பிட்டார்.

## த.தே.கூ...

சக்தியின் பாராளுமன்ற வேட்பாளருமான ரவூப் ஹக்கீம்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் விளைவால் தற்காலிகமாக ஏற்படுத்திக் கொடுத்த வடக்கு - கிழக்கு இணைப்பே முஸ்லிம்களை பெரிதும் பாதித்தது என்றும் அவர் சாடியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

இலங்கை - இந்திய உடன்படிக்கை மூலமாக வடக்கு - கிழக்கு தற்காலிகமாக இணைக்கப்பட்டதன் விளைவாக முஸ்லிம்களுக்கே அதிக பாதிப்புகள் ஏற்பட்டன. முழுமையாக கிழக்கு முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டதன் வலி இன்றும் உள்ளது. அவ்வாறான சூழலில்தான் நாம் அரசியலுக்குவரவேண்டிய நிலையும் உருவானது.

கிழக்கு மாகாணத்தின் ஆட்சியை முஸ்லிம்கள் கைப்பற்றியாக வேண்டும், பொதுத் தேர்தலின் பின்னர் நடைபெறவுள்ள மாகாணசபை தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதிக்கம் மேலும் அதிகரிக்க வேண்டும் என்றால் இம்முறை பொதுத் தேர்தலில் பத்திற்கு குறையாத ஆசனங்களை நாம் எடுத்தாக வேண்டும்.

கடந்த முறை கிழக்கு மாகாண சபையின் ஆட்சியை நாம் கைப்பற்றினோம். அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நாம் பேசி ஒரு தீர்மானத்தை எட்டினோம். இம்முறையும் நடைபெறவுள்ள மாகாண சபை தேர்தலில் கிழக்கின் ஆட்சியை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பெற்றுக் கொள்ள தமிழ் தேசிய கூட்டமைப்புடன் பேச்சுக்களை முன்னெடுக்கும்.

இப்போதே அதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. எனவே, கிழக்கில் முஸ்லிம் ஆட்சியை தக்கவைக்கும் வியூகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வெறுமனே பாராளுமன்ற உறுப்பினர்கள் பெறுவது மட்டுமல்லாது மாகாண ஆதிக்கத்தையும் நாமே பெறுவதற்கான வியூகத்தையே அமைத்துள்ளோம் -என்றார்.

## நேற்று...

தங்க வைக்கப்பட்டவர் என்றும் அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அந்த வகையில் நாட்டில் இதுவரை 2 ஆயிரத்து 804 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியானது.

இவர்களில் 2 ஆயிரத்து 121 பேர் முழுமையாகக் குணமடைந்து வெளியேறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொரோனா நிலவர அறிக்கை

| தொற்றாளர் | புதிய தொற்றாளர் | சிகிச்சை பெறுவோர் | சந்தேகநபர்கள் | குணமடைந்தோர் |
|---|---|---|---|---|
| 2,804 | 22 | 672 | 80 | 2,121 |

இறப்பு 11

மூலம் : சுகாதார மேம்பாட்டு பணியகம்

ஈழநாடு
Eelanadu
28.07.2020 செவ்வாய்க்கிழமை
சார்வரி, ஆடி 11

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 492 7805

# இந்தியாவின் தலையீட்டை கோரும் தமிழ் தேசியம்

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும், யாழ். மாவட்ட வேட்பாளருமான சி.வி.விக்னேஸ்வரன், இந்தியாவின் தலையீட்டை கோரியிருக்கின்றார். கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைத்து உரையாற்றும் போதே இந்தக் கோரிக்கையை முன்வைத்திருக்கின்றார். அதேவேளை சமாதான பேச்சின் போது, இணை அனுசரனை வழங்கிய நாடுகளையும் இலங்கைத் தீவின் பிரச்னையில் தலையீடு செய்யுமாறு கோரியிருக்கின்றார். தமிழ் மக்களின் பிரச்னையை ஓர் அரசியல் பிரச்னையாக கருதும் ஒரேயொரு நாடு இந்தியா மட்டும்தான். இலங்கைத் தீவில் தலையீடு செய்யும் மேற்குலக நாடுகள் அனைத்துமே, இலங்கையின் பிரச்னையை மனித உரிமைகள் சார்ந்த பிரச்னையாக மட்டுமே பார்க்கின்றன. இவ்வாறானதோர் பின்னணியில் விக்னேஸ்வரன் இந்தியாவின் தலையீட்டை கோருவதில் தவறில்லை.

இலங்கையின் இனப்பிரச்னைக்கான தீர்வை காணும் முயற்சியில் இந்தியா ஒரு தவிர்க்க முடியாத சக்தியாகும். ஒருவேளை தமிழர்கள் இந்தியாவை தவிர்க்க விரும்பினாலும் கூட, அது சாத்தியமான ஒன்றல்ல. நோர்வேயின் மத்தியஸ்தத்தின் கீழ், விடுதலைப் புலிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கும் இடையில் இடம்பெற்ற பேச்சின் போது, இந்தியா ஒரு பார்வையாளராக மட்டுமே இருந்தது. உண்மையில் நோர்வேயின் தலையீட்டை இந்தியா ஒருபோதுமே உளப்பூர்வமாக விரும்பியிருக்காது. ஏனெனில் தனது செல்வாக்கிற்குட்பட்ட தெற்காசிய பிராந்தியத்தில், அதிலும் முக்கியமாக தனது உடனடி அயல்நாடான இலங்கையின் பிரச்னையில் மேற்குலகு தலையீடு செய்வதை, இந்தியா ஒருபோதுமே மகிழ்ச்சியுடன் வரவேற்றிருக்காது. நோர்வேயின் சமாதான முன்னெடுப்புக்களை வழிநடத்திய எரிக்சொல்ஹெய்ம், இது தொடர்பில் சில இடங்களில் பதிவு செய்திருக்கின்றார். இதன் காரணமாகவே சமாதானப் பேச்சின் ஒவ்வொரு கட்டங்களும் இந்தியாவிற்கு தெரியப்படுத்தப்பட்டது. எனினும், இந்தியா இல்லாத முன்னெடுப்புக்கள் வெற்றியளிக்காது என்பதை விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மிகவும் தெளிவாகவே உணர்ந்திருந்தார்.

இலங்கையின் சிங்கள ஆட்சியாளர்களின் வரலாறு ஒரு விடயத்தை தெளிவாகக் கூறுகின்றது. அதாவது, வெளியாரின் தலையீடின்றி தமிழ் மக்களின் பிரச்னைக்கு ஒரு நியாயமான அரசியல் தீர்வை இலங்கைக்குள் பெறமுடியாது. இலங்கையில் தமிழ் மக்களின் பிரச்னையை தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட இரண்டு வரலாற்று பேச்சுக்களான 1987 இந்திய - இலங்கை ஒப்பந்தம் மற்றும் 2002 ஒஸ்லோ பேச்சு ஆகிய இரண்டுமே, வெளியாரின் தலையீடுகளால் இடம்பெற்றவைகளே! சிங்கள ஆட்சியாளர்கள், தாங்களாகவே முன்வந்து, இனப்பிரச்னைக்கான தீர்வை காண வேண்டுமென்று இதுவரை எந்தவொரு முயற்சியையும் மேற்கொண்டதில்லை. ஒரு கட்சி முயற்சிப்பதாக கூறும் போது, மற்றைய கட்சி அதனை எதிர்த்து குழப்புவதான நாடகங்கள் பல இடம்பெற்றிருக்கின்றன. இறுதியாக நடந்த நாடகம்தான் ரணில்-மைத்திரி அரசாங்கத்தின் ‘புதிய யாப்பு’ நாடகம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சேர்ந்து நடித்ததுதான் இதிலுள்ள உச்சக் கட்டமாகும்.

இவ்வாறான அனைத்து அனுபவங்களிலிருந்தும் பாடங்களை படிப்பதற்கு தமிழ்த் தலைவர்கள் முயற்சிக்க வேண்டும். நேற்று தமிழர் அரசியலில் என்ன நடந்ததோ, அதுதான் நாளையும் நடக்கப் போகின்றது. ஆனால், ஒன்று மட்டும் உண்மை ஒரு மூன்றாம் தரப்பின் தலையீடின்றி இந்தப் பிரச்னைகளை அணுக முடியாது. அதிலும், இந்தியாவின் ஆசீர்வாதமின்றி, அவ்வாறானதொரு மூன்றாம் தலையீடு ஒருபோதுமே வெற்றியளிக்கப் போவதுமில்லை. இது இந்த பிராந்தியத்தின் சிக்கலான அரசியல் சூழலாகும்.

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நீதி கோரி போராட்டம்

## தடை போட்டது ஏறாவூர் பொலிஸ்

மட்டக்களப்பு, ஜூலை 28

வடக்கு -கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினால் தமது உறவுகளை தேடி ஆர்ப்பாட்டம் நேற்று செங்கலடி சந்தியில் நடைபெற இருந்தது.

கொரோனா தொற்று நோய் நடைமுறைக்கு அமைய பொலிஸாரின் அனுமதியும் பெற்று, 100 பேருக்கும் குறைவானவர்கள் என்ற நிபந்தனைக்கு ஏற்பவே ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இதில் பெரும்பாலும் கருணா மற்றும் பிள்ளையான் குழுவினரால் பாதிக்கப்பட்ட தாய்மாரும் உறவுகளுமே கூடி தமது ஆதங்களை வெளிப்படுத்திக்கொண்டிருந்தனர்.

ஏறாவூர் பொலிஸார் இந்த ஆர்ப்பாட்டத்துக்கு நீதிமன்றத் தடையுத்தரவு பெற்றனர்.



இந்தத் தடை உத்தரவை காட்டி, கூடியிருந்த உறவுகளை கலைந்து போகும்படிபொலிஸார் அறிவுறுத்தினர். அத்தோடு ஏற்பாட்டாளர்களையும் எதிர்வரும் 12ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

# ஓடைக்கரைக் குளத்தின் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 28

யாழ்ப்பாணம்- அராலி ஓடைக்கரைகுளம் கட்டுமானப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்க தேவையான நிதியை விடுவிக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக வட்டுக்கோட்டை கமக்காரர் அமைப்பினர், பிரதமரிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

ஓடைக்கரைகுளம் தடுப்புச் சுவர் கட்டுமானத்தை ஆரம்பிப்பதற்கு அனுமதி யளிக்குமாறு கோரி பிரதமருக்குக் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது.

அந்தக் கடிதத்தை பரிசீலனை செய்த பிரதமர், கட்டுமானப் பணிக்கான நிதியை விடுவிக்குமாறு, சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

பிரதமரின் கோரிக்கைக்கு அமைய அராலி ஓடைக்கரை குளத்துக்கு தடுப்பு சுவர் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட 67லட்சம் ரூபா ஒதுக்கீடு தொகை விடுவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பு சுவர் கட்டுமானப் பணிகள் 2020 ஒகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வாக்கு எண்ணும் நிலையங்கள் இரண்டு மடங்காக அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 28

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்கெண்ணும் நிலையங்களின் எண்ணிக்கை கடந்த வருடங்களுடன் ஒப்பிடும்போது இரு மடங்காக அதிகரித்துள்ளது எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.


கடந்த பொதுத் தேர்தலில் வாக்கெண்ணும் நிலையங்களின் எண்ணிக்கை 1,420 ஆக இருந்தது எனவும், சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டுதலின் கீழ் விரைவாக முடிவுகளை வழங்குவதற்காக இம்முறை அது 2 ஆயிரத்து 820 ஆக உயர்த்தப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதன்படி பிரதான வாக்கெண்ணும் வளாகங்களின் எண்ணிக்கை 71 என்றும், அந்த வளாகங்களில் உள்ள மொத்த வாக்கெண்ணும் நிலையங்களின் எண்ணிக்கை (வாக்கெண்ணும் மண்டபங்கள்) 2 ஆயிரத்து 820 என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு வாக்கெண்ணும் நிலையத்தில் 5 ஆயிரம் தொடக்கம் 6 ஆயிரம் வரையிலான வாக்குகளைப் பெற ஒரு அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த முறையின் கீழ் 453 தபால்மூல வாக்குகளை எண்ணும் நிலையங்களும், 2 ஆயிரத்து 367 சாதாரண வாக்குகளை எண்ணும் நிலையங்களும் நிறுவப்படும்.

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# கூட்டமைப்புக்கு வகுப்பெடுக்க போகின்றாராம் அவர்களிடமே படித்துவிட்டு பிரிந்து சென்ற விக்கி

மன்னார், ஜூலை 28

"கூட்டமைப்பினருக்கு சரித்திர அறிவு இல்லையென்றால் என்னிடம் கேட்கட்டும். நான் அவர்களுக்கு படிப்பித்து கொடுப்பேன். ஆனால் எமது அடையாளங்களையும், வழிபாட்டுத் தலங்களையும் வரலாற்று எச்சங்களையும் அளித்துவிட்டு தமிழர்களின் தாயகம் என்ற பதத்தை நீக்கி விடலாம் என்று பகல் கனவு காண்பவர்களுடன் அவர்கள் கைகோர்த்து பயணிக்காது இருக்கட்டும்."

-இப்படிக் கூறியிருக்கின்றார் வடமாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ்மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தேர்தல் பிரசார கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.45 மணியளவில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் மன்னார் நகர சபை உறுப்பினர் எஸ்.ஆர்.குமரேஸ்




தலைமையில் இடம் பெற்றது.

இதில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எத்தனை இடர் வந்தாலும் எமது உரிமைகள் விடயத்தில் எந்தவிதமான விட்டுக் கொடுப்புக்களையோ, காட்டிக் கொடுப்புக்களையோ நாம் செய்து விடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தோம்.

அதனால் தான் கடும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டபோது இனப்படுகொலை தீர்மானத்தை கைவிடவோ அல்லது பொறுப்புக்கூறல் விடயத்தில் விட்டுக் கொடுப்புக்களை செய்யவோ நான் தயாராக இருக்கவில்லை.

உண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் போது நீரோ பிடில் வாசித்தது போல்தான் நடந்து கொண்டிருந்தார்கள்.

பிரச்னைகளை அப்படியே விட்டு விட்டு தமது சுய இலாப சிந்தனைகளில் இருந்தனர். இப்பொழுதும் அப்படித்தான் இருக்கின்றார்கள்.

கொள்கைகள் என்பது வெறும் வாய்ப் பேச்சு பொருளாக மாறி இருந்தன. நானும் சந்தர்ப்பவாதியாக மாறி சிங்கள மக்கள் மற்றும் அரசியல்வாதிகளுடன் ஏற்கனவே இருந்த தொடர்புகள் காரணமாக அரசுடன் இணைந்து அவர்களுக்கு ஏற்ப தாளம் போட்டு இருந்தால் அல்லது அவர்களை நெல்சன் மண்டேலாவுக்கு ஒப்பாக துதி பாடி இருந்தால் எமது மாகாண சபைக்கு பல மடங்கு நிதியை அவர்கள் ஒதுக்கி இருப்பார்கள்.

பல செயல்திட்டங்களை வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்க அனுமதி வழங்கி இருப்பார்கள்.

ஆனால் அவ்வாறு செய்திருந்தால் தமிழ் மக்களின் பல தசாப்த கால உரிமைப் போராட்டங்களுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தி இருப்பேன். பெரும் துரோகத்தை அதனால் நான் இழைத்திருப்பேன்.

அதனால் தான் நான் அத்தகைய தவறை செய்யவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மட்டுமல்ல அப்போதைய பிரதமர், ஜனாதிபதியுடன் நான் பல தடவைகள் எமது கொள்கைகள் காரணமாக நான் முரண்பட நேர்ந்தது.

சுய நன்மைக்காக கூட்டமைப்பு பாதை மாறியதால் தான் எமது தேசிய கூட்டணி உருவாகியது.

எனவே நாங்கள் பிரிய வேண்டி வந்தமைக்கு காரணம் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் சுயநலம் சார்ந்த கொள்கைகள் - நடவடிக்கைகள் தான். - என்றார்.



# சந்திரகுமாருக்கு அமோக வரவேற்பு

கிளிநொச்சி, ஜூலை 28

சுயேச்சைக் குழு 5 இல் போட்டியிடும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் தேர்தல் பிரசாரக் கூட்டம் பூநகரி - முழங்காவில் பிரதேசங்களில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

பூநகரி - நாச்சிக்குடா சந்தியில் இந்தக் கூட்டம் நடந்தது.

இதன்போது கருத்துரைத்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார், கிளிநொச்சியில் இந்த தேர்தலில் மாற்றத்தை ஏற்படுத்த மக்கள் அணி திரண்டுள்ளமை எமது வெற்றியை உறுதி செய்துள்ளது. இதன் மூலம் இந்தத் தேர்தலில் மக்கள் வெற்றி பெறவுள்ளனர். குறிப்பாக இளைஞர்கள் மாற்றத்தை விரும்புகின்றனர். அந்த மாற்றத்திற்காக அவர்களின் தெரிவு எமது கேடயச் சின்னமாகவே இருக்கிறது-என்றார்.

# கூட்டமைப்பினர் 2 கோடி ரூபா லஞ்சம் வாங்கியமை அம்பலம்

## சொல்கிறார் கருணா

அம்பாறை, ஜூலை 28

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு கடந்த ஆட்சிக் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் 2 கோடி ரூபா லஞ்சம் வாங்கியமை அம்பலமாகியுள்ளது என விநாயகமூர்த்தி முரளிதரன் கூறியுள்ளார்.

அம்பாறை வீரமுனை பகுதியில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த ஆட்சிக்காலத் தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வைத்துக் கொண்டு அரசுக்கு முட்டுக்கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு சுகபோகங்களை அனுபவித்தனர். இந்தக் கூட்டமைப்பினர் நம்பிக்கையில்லாப் பிரேரணை அதே அரசுக்கு எதிராக கொண்டுவரப்பட்டபோது 2 கோடி ரூபா பணத்தை லஞ்சமாக வாங்கியுள்ளனர். இந்த விடயத்தை அந்த நேரம் அம்பலத்திற்கு கொண்டு வந்தவர் சிவசக்தி ஆனந்தன்.

சிவசக்தி ஆனந்தன் நேர்மையானவர். இந்த 2 கோடி பணத்தைக் கூட்டமைப்பின்



சகல உறுப்பினரும் பெற்றுக்கொண்டிருந்தனர். இவ்வாறானவர்களின் போக்கினால் தான் அதாவுல்லாஹ், ஹரீஸ் போன்றவர்கள் தமிழ் மக்களை பல்வேறு வகைகளில் துன்புறுத்தி வருகின்றனர்- என்றார்.

# சமூக நல்லிணக்க அமைப்பு கூட்டமைப்புக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், ஜூலை 28

வடக்கு-கிழக்கு சமூக நல்லிணக்க அமைப்பு 2020 பொதுத் தேர்தலில் தமது ஆதரவை தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு வழங்குவதாக அறிவித்துள்ளது.

அந்த அமைப்பின் பிரதிநிதிகள் நேற்றுத் திங்கட்கிழமை காலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பருத்தித்துறை அலுவலகத்தில் கட்சியின் பேச்சாளரும் வேட்பாளருமான எம்.ஏ.சுமந்திரனைச் சந்தித்து தமது ஆதரவை வெளிப்படுத்தினர்.

தமிழர்களே ஓரணி சேருங்கள், தமிழ் தேசியமே எங்கள் மூச்சு என்று கூறுங்கள் என்ற தலைப்பில் வடக்கு-கிழக்கு சமூக நல்லிணக்க அமைப்பு துண்டறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

# சட்டத்துக்கு முரணாக தேர்தல் பிரசாரம் செய்யும் சனத் நிசாந்த

கொழும்பு, ஜூலை 28

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிசாந்த தனது தேர்தல் பிரசார நடவடிக்கைகளைச் சட்டத்துக்கு முரணான விதத்தில் முன்னெடுக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலக்கத் தகடு அற்ற மோட்டார் சைக்கிளில் தலைக்கவசம், முகக் கவசம் எதுவும் இன்றி அவர் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

பொதுஜன பெரமுன வேட்பாளர் ஒருவர் இவ்வாறு நடந்துகொண்டமை தொடர்பான புகைப்படங்களும், காணொலியும் தற்போது சமூக வலைத்தளங்களில் உலா வருகின்றன.

இதன்போது பொலிஸாரும் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்ததுடன் அவர்களும் தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் சனத் சிசாந்தவை தடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் மாத்திரமன்றி அவரது ஆதரவாளர்களும் இவ்வாறு சட்டவிரோதமான முறையில் நடந்துகொண்டுள்ளனர்.




# தமிழர்களுக்கு உரிமை கொடுக்காமல் இழுத்தடிப்பது இனியும் சாத்தியமற்றது

## கூட்டமைப்பின் தலைவர் தெரிவிப்பு



திருமலை, ஜூலை 28

தமிழ் மக்களின் அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்ளும் மிக நீண்டகாலப் போராட்டத்தின் விளைவாக இன்று தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ளும் முக்கியமான கட்டத்தில் உள்ளோம். எனவே அதற்கான அழுத்தங்களைக் கொடுக்கும் பலமான தமிழர் அணியொன்று பாராளுமன்றத்தில் இருக்க வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் அரசியல் செயற்பாடுகள், இம்முறை பாராளுமன்றத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்களிப்பு குறித்து கருத்துக்களை முன்வைக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாடு சுதந்திரம் அடைந்ததில் இருந்து எமது உரிமைக்கான போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. போராட்டங்கள், சர்ச்சைகள், ஒத்துழைப்புகள், ஒப்பந்தங்கள் எனக் கடினமான பயணம் ஒன்றை நாம் முன்னெடுத்துள்ளோம். ஆனால் துரதிஷ்டவசமாக தீர்வை பெற்றுக் கொள்ள முடியாது உள்ளது. சிங்களப் பெரும்பான்மை இனம் தமது ஆதிக்கத்தை தமிழ் மக்கள் கூடுதலாக வாழும் பிரதேசங்களில் கூட குறைத்துக்கொள்ள விரும்பவில்லை. அதன் காரணமாகவே போராட்டங்கள் தொடர்ந்தன.

ஆயுத போராட்ட காலத்தில் இருந்து தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள எமது முயற்சிகள் முன்னெடுக்கப் பட்டன. இன்றும் தீர்வுகளை பெற்றுக்கொள்வதில் எமது முயற்சிகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. அதிகாரப் பகிர்வு விடயத்தில் முழுமையான, உறுதியான, நிலைத்து நிற்கக்கூடிய-மாற்றியமைக்க முடியாத தீர்வாக உருவாகவேண்டும். கடந்த காலங்களில் பல ஜனாதிபதிகளின் கீழ் நாம் இதற்கான முயற்சிகளை எடுத்துள்ளோம். அதன் விளைவாக தீர்வு கிடைக்கக் கூடிய இடத்தில் நாம் உள்ளோம். இந்த இடத்தை இலகுவாக நாம் அடையவில்லை.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இந்தியப் பிரதமர் தனது பிரதிநிதியை இலங்கைக்கு அனுப்பி வைத்திருந்தார். அதில் தமிழ் மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டும், நீதி கௌரவத்தின் அடிப்படையில் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதை தெளிவாகக் கூறியுள்ளார். இலங்கை ஜனாதிபதி, பிரதமர் இருவருக்கும் இந்தியா அழுத்தமாக கூறியுள்ளது.

ஆகவே தீர்வை பெற்றுக்கொள்ள பலமான தமிழர் அணியொன்று பாராளுமன்றத்தில் இருக்க வேண்டும். அதற்கு இந்த தேர்தலை எமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்-என்றார்.



# கூட்டமைப்பின் அலுவலகம் சாவகச்சேரியில் திறப்பு

தென்மராட்சி, ஜூலை 28

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் செயற்பாட்டுக்கான அலுவலகம் நேற்று சாவகச்சேரியில் திறந்து வைக்கப் பட்டது.

தென்மராட்சி - சாவகச்சேரி - பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள அலுவலகத்தை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளருமான மாவை சேனாதிராசாவினால் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் சசிகலா ரவிராஜ், சாவகச்சேரி நகராட்சி மன்ற தவிசாளர் சிவமங்கை இராமநாதன், உப தவிசாளர் அ.பாலமயூரன், கட்சியின் ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.



# இறுதி போரில் மக்கள் இழந்த நகைகளை மீட்டுத் தருவோம்

## சுதந்திரக் கட்சியின் விண்ணன் உறுதி

“நாம் பாராளுமன்றம் சென்றால் தமிழ் மக்களின் பிரச்னைகளை குறுகிய காலத்தில் தீர்ப்போம். பல துன்பங்களின் மத்தியில் சேமித்த மக்களின் நகைகள் போரில் காணாமல் போயின. அந்த நகைகளை மக்களிடம் மீண்டும் ஒப்படைக்கச் செய்வோம் என்று கூறியுள்ளார் விண்ணன் என்று அறியப்பட்ட ப.வரதராஜசிங்கம்.

யாழ். ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனை தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச விசாரணை என பேசி வரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இனத்திற்கு துரோகம் இழைத்துள்ளனர். 2001 ஆம் ஆண்டிலிருந்து தமது நரித் தந்திரமான செயற்பாடுகளால் தமிழ்த் தேசிய போராட்டத்தையும் தமிழ் மக்களையும் காட்டிக் கொடுத்து உள்ளனர்.

அங்கஜன் ராமநாதன் தலைமையில் நானும் பாராளுமன்றம் சென்றால் தமிழ் மக்களின் பிரச்னைகளை அரசாங்கத்துடன் பேசி குறுகிய காலத்திலேயே தீர்த்து வைப்போம். பல துன்பங்களின் மத்தியில் சேமித்த மக்களின் நகைகள் போரில் காணாமல்போயின. அந்த நகைகளை மீட்டு உரியவரிடம் ஒப்படைப்போம். அல்லது அதற்கான பணத்தைப் பெற்றுக் கொடுப்போம்.

யாழ்ப்பாணம் இராணுவ கட்டுப்பாட்டில் இருந்தபோது இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பில் விசாரிக்க குழு ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுப்போம் - என்றார்.

# மக்கள் பிரச்னைகளை மறைக்க அரசு முயற்சி!

## சரத் பொன்சேகா குற்றச்சாட்டு



மக்கள் எதிர்கொள்ளும் உண்மையான பிரச்னைகளை மறைக்க அரசு முயற்சிக்கின்றது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா குற்றம் சாட்டி யுள்ளார்.

நீர்கொழும்பு பெரியமுல்ல பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், பணவீக்கம் மற்றும் பொருளாதார பிரச்னைகள் உட்பட பல சிக்கல்களை மக்கள் எதிர்கொள்வதாக சுட்டிக் காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2,000 முதல் 3,000 இராணுவத்தினரைக் கொலை செய்தமை தொடர்பாக கருணா தெரிவித்த கருத்து, முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் இறுதிச் சடங்கில் சுகாதார நடைமுறைகள் மீறப்பட்டமை மற்றும் 2011 உலகக் கிண்ணப் போட்டியில் ஆட்ட நிர்ணயம் இடம்பெற்றதாக முன்வைக்கப் பட்ட பொய்யான குற்றச்சாட்டு உள்ளிட்ட பல விடயங்களை முக்கியமல்ல எனக் கூறி புறக்கணிக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பொதுமக்களிடம் கோரியுள்ளார்.

அத்தோடு நாட்டுக்கு எதிரான சர்வதேச சதியை முறியடிப்பதற்காக மக்களை அணி திரளுமாறும் பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார். ஆனால் பொதுமக்கள் ஏமாற றமாட்டார்கள் - என்றார்.

# தமிழ் மக்களின் தேசியத் தலைவர் என கூறுவோர் இனப்படுகொலையின்போது எங்கே போனார்கள்?

## விஜயகலா மகேஸ்வரன் கேள்வி



தமிழ் மக்களின் தேசியத் தலைவர் தாம் எனக் கூறுபவர்கள் வன்னியில் இறுதி யுத்தத்தில் மக்கள் இனப்படு கொலை செய்யப்படும்போது எங்கே போனார்கள் எனக் கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் விஜயகலா மகேஸ்வரன்.

பருத்தித்துறையில் நேற்று முன் தினம் இடம் பெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இறுதி யுத்தம் நடைபெற்றபோது பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர்கள் அன்று தமது பதவியை ராஜினாமா செய்திருந் தால் அரசுக்கு ஒரு பேரிடியாக இருந்திருக்கும். அதேபோல் மக்கள் கொல்லப்பட்டிருக்க மாட்டார்கள்.

இவர்களெல்லாம் தமிழ் மக்களின் நலனுக்காக தேர்தலில் போட்டியிடுவதாக இருந்தால் ஏன் இவ்வாறு கட்சிகளாக பிரிந்து வாக்குகளைச் சிதறடிப்பதற்கு செயற்படுகின்றார்கள்.

அத்தோடு சிலர் தம்மைத் தேசியத் தலைவர் என்று கூறித் திரிகிறார்கள். இவர்களெல்லாம் வன்னியில் 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தம் நடைபெற்றபோது எங்கே இருந்தார்கள்? பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள் சிலர் விடுமுறை எடுத்துக்கொண்டு வெளிநாடுகளில் தங்கியிருந்தார்கள். அவ்வாறு தமது சுயலாப அரசியல் செய்வதற்காகவே இங்கே வாக்கு கேட்டு வருகின்றார்கள். எனவே மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும்-என்றார்.



## கைதான போலி வைத்தியருக்கு விளக்கமறியல்!

கொழும்பு, ஜூலை 28

வத்துபிட்டிவல வைத்தியசாலைக்குள் வைத்தியர் போல வேடமிட்டு நுழைந்த நபரை, எதிர்வரும் ஓகஸ்ட் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அவர் வத்துப்பிட்டிவல ஆதார வைத்தியசாலைக்குள் வைத்தியர் போல வேடமிட்டு நுழைந்தார். வைத்தியசாலை யின் பெண்கள் விடுதியில் அவர் நுழைந்த போது, நோயாளர்களைப் பார்வையிடும் நேரம் முடிவடைந்திருந்தது. நோயாளியொருவரை பார்வையிட வந்ததாக அவர் தெரிவித்திருந்தார்.

அவரில் சந்தேகமடைந்த வைத்திய சாலை ஊழியர்கள், பொலிஸாரிடம் அறிவித்தனர்.

நிட்டம்புவ பொலிஸார் அவரை கைது செய்தனர். எனினும், வைத்தியர் என்பதை நிரூபிக்க போதுமான ஆதாரம் அவரிடமிருக்கவில்லை.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் அவர் இந்தியர் என்பது தெரிய வந்தது. இலங்கையர் ஒருவரை மணந்து, சில வருடங்களாக இலங்கையில் இருப்பதாக தெரிய வந்துள்ளது.

## போதைப்பொருள் வைத்திருந்த யுவதி கைது!

வவுனியா, ஜூலை 28

போதைப்பொருட்களை உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் வவுனியாவில் யுவதியொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரது துணைவர் எனக் குறிப்பிடப்படும் ஒருவரும் கைதாகியுள்ளார்.

வவுனியா மடுகந்தை விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலிற்கமைய, நேற்று முன் தினம் இரவு வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் உள்ள வீடொன்றில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது போதைப்பொருள் மீட்கப்பட்டது. அந்த வீட்டில் இருந்த 24 வயதான இளைஞனும், 25 வயதான யுவதியும் கைது செய்யப்பட்டனர்.

## 1,119 பேர் கைது

கொழும்பு, ஜூலை 28

மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் பல்வேறு குற்றம் சம்பவங்களுடன் தொடர்புடைய 1,119 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 402 பேர் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## பிள்ளையானின் மறியல் நீடிப்பு!

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனின் (பிள்ளையான்) விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மேல் நீதிமன்ற விசேட நீதிபதி டி.சூசைதாசன் முன்னிலையில் பிள்ளையான் உள்ளிட்ட சந்தேகநபர்கள் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

விசேட அதிரடிப்படை, பொலிஸாரின் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் பிள்ளையான் நேற்று நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டிருந்தார்.

இதன்போது எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 19ஆம் திகதி வரை வழக்கை ஒத்திவைப்பதாக நீதிபதி அறிவித்தார்.





# சுகாதார நடைமுறைகளுடன் மாணவர் பாடசாலைகளுக்கு

கொழும்பு, ஜூலை 28

'கொரோனா' வைரஸ் தாக்கத்தால் மேலதிக விடுமுறை வழங்கப்பட்டிருந்த பாடசாலைகள் நேற்று திங்கட்கிழமை முதல் மீண்டும் ஆரம்பமாகின.

அதிபர், ஆசிரியர்கள் மற்றும் தரம் 11, 12, 13 ஆம் வகுப்பு மாணவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பாடசாலைகளுக்கு வருகை தந்தனர்.

இதன்படி முகக்கவசம் அணிந்து வந்த அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலை நுழைவாயிலுக்கு முன்னால் உள்ள இடத்தில் கைகளைக் கழுவினர். அதன்பின்னர் அவர்களின் உடல் உஷ்ணம் கணிப்பிடப்பட்டது. அதன்பின்னரே உள்ளே அனுமதிக்கப்பட்டனர்.

இதன்போது சுகாதார நடைமுறைகளை எவ்வாறு பின்பற்றுவது, மாணவர்கள் வருகை தந்த பின்னர் அவர்களிடையே சுகாதார பழக்கவழக்கங்களை ஊக்குவிப்பது எப்படி, யாருக்காவது திடீரென சுகயீனம் ஏற்பட்டால் அதனை எவ்வாறு கையாள்வது என்பது உட்பட மேலும் பல விடயங்கள் தொடர்பில் அதிபர்களால் விளக்கமளிக்கப்பட்டதுடன், ஆசிரியர்களின் கருத்துகளும் உள்வாங்கப்பட்டன.

சமூக இடைவெளியைப் பின்பற்றி வகுப்பறையில் இட ஒதுக்கீடுகள் இடம்பெற்றிருந்தன. சில மாணவர்கள் முகக்கவசம் அணியாமல் வந்திருந்தனர். அவர்களுக்கு உரிய அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருந்தன.

## யாழ்.பல்கலை துணைவேந்தர் தேர்தல் ஓகஸ்ட் 12ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ். பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் 12ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. இதன்படி 6 பேர் விண்ணப்பித்திருந்தனர். விண்ணப்பித்தவர்களில் மூவரைத் தெரிவு செய்து ஜனாதிபதிக்கு பரிந்துரைக்க வேண்டும். இதற்காக யாழ். பல்கலைக்கழகத்தின் பேரவையில் உள்ளோர் வாக்களிக்கவுள்ளனர்.

இந்த வாக்கெடுப்பை நடத்துவதற்காக மதிப்பீட்டாளர்கள் என நால்வர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் இருந்து வருகை தர உள்ளனர்.

## இணையம் மூலம் பண மோசடி; 5 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 28

இணையத்தின் ஊடாக வெளிநாட்டில் உள்ள தொழிலாளர்களுக்கு சலுகை வட்டி வீதத்தின் ஊடாக கடன் வழங்குவதாக கூறிப் பண மோசடியில் ஈடுபட்ட 5 பேர் கிருலப்பனை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

30, 39, 38 மற்றும் 46 வயதுடைய பிட்டபத்தர, நாரஹேன்பிட்டி மற்றும் வெல்லம்பிட்டிய பகுதியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடன் வழங்குவது தொடர்பில் வெளிநாட்டில் உள்ள தொழிலாளர்களுக்கு தொலைபேசியூடாக அறிவித்து அவர்களுடைய வங்கி விவரங்களை பெற்று அதனூடாக ஒருவரின் கணக்கில் இருந்து 5 இலட்சம் ரூபா வீதம் மோசடி செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தன்னுடைய வங்கிக் கணக்கில் இருந்து பண மோசடி செய்யப்பட்டதாக பெண் ஒருவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது சந்தேக நபர்களிடம் இருந்து மடிக்கணினி ஒன்று, வங்கி அட்டைகள், லெமினேட் இயந்திரம் ஒன்று, போலி ரபர் ஸ்டேம் 02, போலி சாரதி அனுமதி பத்திரங்கள் 61, அதற்காக பயன்படுத்தும் அட்டைகள் 925 மற்றும் சர்வதேச சாரதி அனுமதி பத்திரங்கள் 5 பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

## எழுமாற்றாக நாடு முழுக்க பி.சி.ஆர். பரிசோதனைகள்

கொழும்பு, ஜூலை 28

நாடு முழுவதும் எழுமாற்றாக பிசிஆர் சோதனைகளை நடத்தவுள்ளதாக, தொற்று நோயியல் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

கந்தக்காடு புனர்வாழ்வு முகாமில் பரவிய தொற்று நாட்டின் பல்வேறு பாகங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள நிலையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

பாதிக்கப்படக் கூடிய பகுதிகள் என அடையாளம் காணப்பட்ட இடங்களில் இந்தச் சோதனைகள் நடத்தப்படும். கொழும்பு மாநகர சபையில் பாதிக்கப்படக் கூடிய பகுதி கள் என பல இடங்கள் இனங் காணப்பட்டுள்ளன. இங்கு கந்தக்காடு தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்களைக் கண்டறிவதற்கான முயற்சிகள் இன்னமும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினார்.



## இலங்கைக்கு சீனா கையூட்டு

### சுஜீவ சேனசிங்க பரபரப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 28

இலங்கையில் வர்த்தகத் தொடர்புகளைத் தக்கவைத்துக் கொள்வதற்காக சீனா கையூட்டலை வழங்குவதாக முன்னாள் ராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது அவர் இந்தக் குற்றச்சாட்டைச் சுமத்தினார்.

இந்தியா, ஜப்பான் மற்றும் ஜேர்மனி போன்ற நாடுகள் தமது வர்த்தக இருப்புக்களுக்காக இலங்கைக்கு கையூட்டல்களை வழங்குவதில்லை என்று அவர் இதன்போது தெரிவித்தார்.

கையூட்டல்களை பெற்றுக்கொள்வதற்காகவே ராஜபக்சர்கள் அடிக்கடி சீனாவுக்குச் செல்கிறார்கள் என்றும் சுஜீவ சேனசிங்க குற்றம் சுமத்தினார்.

செய்திகள்

# சைவர்கள் சுமந்திரனுக்கு வாக்களிக்கவேண்டாம்!

## மறவன்புலவு சச்சிதானந்தம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 28

சைவர்கள் யாரும் சுமந்திரனுக்கு வாக்களிக்க வேண்டாம். சுமந்திரனுக்கு எதிராக 100 கோடி ரூபா நட்டஈடு கோரி வழக்கு தாக்கல் செய்யவுள்ளேன் என மறவன்புலவு சச்சிதானந்தம் தெரிவித்தார்.

மறவன்புலவு பகுதியில் சிவசேனை அமைப்பின் தலைவர் சச்சிதானந்தத்தால் அமைக்கப்பட்டு வரும் புதிய கோவிலின் கருவறையில் சுமந்திரனின் சுவரொட்டிகள் நேற்று முன் தினம் இரவு ஒட்டப்பட்டிருந்தன. தேர்தல் விதிமுறைகளை மீறி ஆலயத்தின் கருவறையில் தேர்தல் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டமை தொடர்பில் மறவன்புலவு சச்சிதானந்தநினால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதன் அடிப்படையில் சாவகச்சேரி பொலிஸாரினால் அந்தச் சுவரொட்டிகள் அகற்றப்பட்டன.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சச்சிதானந்தம்,

சைவ சமயத்தை இழிவுபடுத்தும் செயற்பாட்டில் சுமந்திரன் ஈடுபடுகின்றார். சைவக் கோயில்களுக்குச அவமதிப்பு ஏற்படுத்தும் முகமாக அவருடைய தேர்தல் சுவரொட்டிகளை சைவக் கோயில்களில் கருவறைக்குள் ஒட்டியிருக்கின்றார். கருவறை என்பது சைவர்களுடைய நம்பிக்கைக் குரிய இடம்.

கருவறையிலேயே சுமந்திரன் தன்னுடைய தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டுவதன் மூலம் சைவ சமயத்தை இழிவுபடுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றார். தேர்தல் விதிமுறைகளையும் மீறி மக்களுடைய நம்பிக்கையையும்



உடைத்து கிறிஸ்தவர்களுடைய மேலாதிக்கத்தினை உயர்த்தும் முகமாக கோயில் கருவறையிலேயே தேர்தல் சுவரொட்டிகளை 26ஆம் திகதி இரவு ஒட்டிருக்கிறார். இதை வன்மையாகக் கண்டிப்பதோடு அவரிடம் நூறு கோடி ரூபா நட்டஈடு கோரி வழக்கு தாக்கல் செய்யவுள்ளேன்.

அத்தோடு இந்த வீட்டுக்குப் பொறுப்பான கட்சித் தலைவருக்கு எதிராகவும் அத்தோடு சாவகச்சேரி தொகுதி வீட்டுக்கு பொறுப்பானவருக்கு எதிராகவும் வழக்கைப் பதிவு செய்யவுள்ளேன். எனினும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளதோடு தேர்தல் திணைக்களத்திலும் இது தொடர்பான முறைப்பாடு ஒன்றை நான் பதிவு செய்யவுள்ளேன்.

சைவ மக்கள் இயல்பாக வாழ்வதா அல்லது அவர்களுடைய கோவில்களை அழிப்பதும் கிறிஸ்தவர்களுடைய நோக்கமா என்பது இங்கே புலனாகின்றது. எனவே சைவர்கள் யாரும் சுமந்திரனுக்கு வாக்களிக்கவேண்டாமென நான் கோரிக்கை விடுக்கின்றேன்-என்றார்.

# கடலட்டை பிடிப்பதற்கு எதிரான சுமந்திரனின் வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28

வடமராட்சி பகுதியில் கடலட்டை மற்றும் தொழில்களில் ஈடுபடுவதை நிறுத்தக் கோரி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரனால் பருத்தித்துறை நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நேற்று வழக்குத் தவணையின்போது, நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகள் சமூகமளிக்காத காரணத்தாலும் நீதிவான் விடுப்பில் சென்றுள்ளமையாலும் வழக்கு மீண்டும் எதிர்வரும் வியாழக்கிழமை பிற்போடப்பட்டிருக்கிறது.

சட்டவிரோத கடலட்டைத் தொழிலுக்கு கடந்த வருடம் பருத்தித்துறை நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்திருந்தது.

எனினும், இந்த வருடமும் மீண்டும் கடலட்டை பிடிப்பவர்கள் பருத்தித்துறையில் முகாமிட்டுள்ளனர். இவர்களை அகற்றக்கோரி, கடந்த 22ஆம் திகதி எம்.ஏ.சுமந்திரன் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார். அது நேற்று வரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது. நேற்றும் வழக்கு தவணையிடப்பட்டுள்ளது. - என்று தெரிவித்தார்.

# முதல் தேர்தல் முடிவுகள் 6ஆம் திகதி மாலை வரும்

பொதுத் தேர்தலின் முதலாவது தேர்தல் முடிவுகள் 6ஆம் திகதி மாலை வெளியாகும் எனத் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

2020 பொதுத் தேர்தல் வாக்களிப்பு ஐந்தாம் திகதி காலை ஏழு மணிமுதல் மாலை ஐந்து மணிவரை இடம்பெறவுள்ளது.

இதனையடுத்து, வாக்குகளை எண்ணும் நடவடிக்கை ஆறாம் திகதி காலை 6 மணிக்கு ஆரம்பமாகும் எனத் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் 6ஆம் திகதி மாலை முதலாவது முடிவை அறிவிக்க எண்ணியுள்ளோம் என்றும் அவர் கூறினார்.

# 3,556 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஜூலை 28

நாடளாவிய ரீதியில் உள்ள 44 தனிமைப்படுத்தல் நிலையங்களில் 3 ஆயிரத்து 556 நபர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

கொரோனா வைரஸ் தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து மேலும் 29 பேர் நேற்று வெளியேறினர்.

அதற்கமைய, 26 ஆயிரத்து 942 பேர் முத்தரப்பு படையினரால் பராமரிக்கப்படும் தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்து தனிமைப்படுத்தல் நடைமுறையை நிறைவு செய்துள்ளனர் என இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் நேற்று முன்தினம் 1,851 பி.சி.ஆர் .சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. அதன்படி இது வரை மொத்தமாக 153,065 பி.சி.ஆர். சோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# பகைமை தூண்டும் கருத்துக்களால் வன்முறை இடம்பெற அதிக வாய்ப்பு

## தேர்தல் கண்காணிப்பு அமைப்பு சுட்டிகாட்டு

கொழும்பு, ஜூலை 28

தேர்தல் பிரசாரங்களில் பெரும்பாலான வேட்பாளர்கள் பகைமையை தூண்டும் வகையில் கருத்துக்களை வெளியிடுகின்றமையால் வன்முறைகள் இடம்பெறுவதற்கு வாய்ப்பு உள்ளதெனத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகளின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-




பெரும்பாலான அரசியல் கட்சியின் தலைவர்கள் தேர்தல் பிரசாரங்களில் வெளியிடும் கடுமையான கருத்துக்கள் மற்றும் சமூக ஊடகங்களில் வெளிப்படுத்தும் கருத்துக்கள் பகைமையை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளன.

இதனால் தேர்தலுக்கு முன்னரும் பின்னரும் வன்முறைகள் நிகழ்வதற்கு அதிக வாய்ப்பு உள்ளது. இதேவேளை விருப்பு வாக்குகளுக்காக சில கட்சிகளுக்குள் மோதல்களும் இடம்பெறுகின்றன.

எனவே தேர்தல் வன்முறைகளை தவிர்ப்பதற்காக அரசியல் கட்சிகளின் தலைவர்களும் வேட்பாளர்களும் தாங்கள் பயன்படுத்தும் வார்த்தைகள் குறித்து அவதானமாக இருக்கவேண்டும்-என்றார்.

# நடமாடும் வாக்குச்சாவடி திட்டம் சாத்தியம் இல்லை

கொழும்பு, ஜூலை 28

எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள நபர்களுக்காக ஏற்பாடு செய்யப்படவிருந்த நடமாடும் வாக்குச்சாவடி வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சாத்தியம் இல்லையெனத் தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் அந்த ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய இதனைத் தெரிவித்தார்.

அரசியல் கட்சிச் செயலாளர்கள் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகளுக்கு இடையில் நேற்றுக் கலந்துரையாடல் இடம்பெற்றது.



அதற்காக அனைத்து கட்சிச் செயலாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் நேற்றுக் காலை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இதன்போது தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் உள்ளவர்களுக்கு விசேடமாக ஜூலை 31ஆம் திகதி வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளமை தொடர்பாக ஆராயப்பட்ட நிலையில், இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.


நாடாளுமன்றத் தேர்தல் - 2020
யாழ்.- கிளிநொச்சி மாவட்டம்



உங்கள் செயல் வீரன்
M.A.சுமந்திரன்
1 X
இலங்கை தமிழ் அரசுக் கட்சி
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

# யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

## நாடாளுமன்றத் தேர்தல் 2020

**எமது கிளிநொச்சி மாவட்ட வாக்காளப் பெருமக்களே!**
**உங்களிடம் நான் உரிமையுடன் கேட்பது**
**உங்கள் வாக்குகளை கிளிநொச்சி மாவட்ட அபிவித்திக்கு வாக்களியுங்கள்!**



**எமது கிளிநொச்சி மாவட்டத்தில் இயற்கை வளமோடும், செல்வச் செழிப்போடும், போரால் பாதிக்கப்பட்டு உறவுகளை இழந்து, சொல்லொணாத் துன்பத்துடனும் வாழ்ந்த பிரதேசமும் வாழ்ந்து கொண்டிருக்கும் பிரதேசமும் என்பதை நாங்கள் சிந்தித்து 2020 நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க வேண்டும்.**

**கிளிநொச்சி மாவட்டத்தில் பலதுறையிலும் அபிவிருத்திகளை மேற்கொள்ள என்னால்முன்வைக்கப்படும் திட்டங்களில் சில கீழ்வருமாறு -**

- எங்களது கிளிநொச்சி மாவட்ட விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்குரிய திட்டங்களும் கடல் நீரை நன்னீராக்கி விவசாயத்துக்குப் பயன்படுத்தும் திட்டங் களும் மற்றும் பல விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய விரிவான விளக்கங்களை நான் ஒரு சிறிய புத்தக வடிவில் உங்களுக்கு சமர்ப்பித்திருக்கின்றேன்.
- அதனை பாரிய குழாய்கள் மூலம் விநியோகிக்கும் திட்டங்களும் முன்னெடுக்கப்படும்.
- இரணைமடு நீர்த்தேக்கத்தின் ஒவ்வொரு துளி நீரும் வீணாகாது பயன்படுத்த ஆவன செய்தல்.
- புதிய வகை நெல் இனங்களை அறிமுகப்படுத்தல்.
- தொழில்முயற்சிகளுக்கு தேவையான கடன் வசதி களைக் குறைந்த 4 வீத வட்டியில் வழங்க ஆவன செய்தல்.
- கிளிநொச்சி மாவட்டத்தின் சகல பகுதிகளுக்குமான போக்குவரத்து வசதிகள் சீராக அமைத்துக் கொடுக்கப்படும்.
- பனையில் இருந்து பெறப்படும் கள்ளை போத்தலில் அடைக்கும் தொழிற்சாலையும் அடுத்ததாக சாராய உற்பத்தி செய்யும் பெரிய தொழிற்சாலையும் அமைக்கப்படும்.
- பனையில் இருந்து பெறப்படும் பதநீரில் பனங்கட்டித் தொழிற்சாலைகள் சீனித் தொழிற்சாலைகள் அமைக்கப்படும்.
- பனையில் இருந்து பெறப்படும் பனங்கிழங்கில் இருந்து உணவுகள் உற்பத்தி செய்யும் பல தொழிற்சாலைகள் நிறுவப்படும்.
- சிறு கைத்தொழில் சாலைகள் அமைத்து, இம்மாவட்டத்தின் படித்த வாலிபர்கள், யுவதி களுக்குப் புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல்.
- கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்தல்
- படையினர் கட்டுப்பாட்டில் இருக்கும் மக்கள் வாழ்விடங்களையும் காணிகளை யும் மீட்டெடுத்து, மக்களை மீள்குடி யேற்ற ஆவன செய்தல்.
- புனர்வாழ்வு பெற்ற போராளிகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் சுய கைத்தொழில் பயிற்சிகளை வழங்கி தொழில்வாய்ப்பு ஏற்படுத்தல்.

**கை சின்னத்துக்கும் அங்கஜன் இராமநாதன் அவர்களின்**
**இலக்கம் 1 இற்கும் எனது வெற்றி இலக்கமாகிய இலக்கம்**
**5 இற்கும் வாக்களித்து உங்கள் வெற்றியை நிலைநாட்டுங்கள்!**

**ஆளும் கட்சியும் அடுத்த ஐந்தாண்டுக்கு ஆட்சியில் இருக்கப்போகும் கட்சியான எங்களுக்கு வாக்களிப்பதன் மூலம் அரசியல் தீர்வுக்கான முயற்சிகளை மேற்கொண்டு அதேசமயம் வடமாகாணத்தில் பாரிய அபிவிருத்தியை மேற்கொள்வதன்மூலம், வேலையில்லாப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவோம் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை.**



**‘உங்கள் வாக்கு உங்கள் உரிமை**
**சரியான முறையில் வாக்களியுங்கள்!’**

**தமிழ்த் தேசியமும்**
**தமிழ்த் தாயும்**
**வாழ்க!**

## விண்ணன்

**ப.வரதராஜசிங்கம்**

X

1 2 3 4 5 6 7 8 9 10

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

facebook.com/vinnan05

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக. சோமஸ்கந்தராஜக்குருக்கள்



7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ



12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
சிம்பு மற்றும் ஹன்சிகா நடிப்பில் வாலு




மந்த்ரா 2
திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : இப்படியும் பாடலாம்
5.00 மணி : ட்றெய்லர் டைம்
6.00 மணி : மூவி டோக்கீஸ்
**இரவு**
7.00 மணி : கொத்துப்பரோட்டா
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை




10.00 மணி : யாவரும் கேளீர்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
**இரவு**
7.00 மணி : ஓய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 10 - கணிதம்
1.00 மணி : தரம் 09 - கணிதம்
2.00 மணி : தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் வரலாறு
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
**இரவு**
7.00 மணி : க.பொ.த உயர்தரம் வணிகக்கல்வி மாதிரி வினாத்தாள்

**ஓம் சிவி**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : நல்லூர் கந்தன் 3ஆம் நாள் மாலைத் திருவிழா மறுஒளிபரப்பு
10.00 மணி : நல்லூர் கந்தன் 4ஆம் நாள் காலைத் திருவிழா நேரலை
11.30 மணி : பக்திமலர்
**பகல்**
12.30 மணி : திருவிழா
4.30 மணி : நல்லூர் கந்தன் 4ஆம் நாள் மாலைத் திருவிழா நேரலை
**இரவு**
7.00 அருளுரை
7.30 திருவாசகம்
08.00 நல்லூர் கந்தன் 4ஆம் நாள் மாலைத் திருவிழா மறுஒளிபரப்பு

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடலகள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித அந்தோனியார் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.00 மணி : நிதர்சனம்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்
**பகல்**
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.07.2020 அன்று வெளியிடப்பட்டது.